DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

Case No. CC.No.242/2022

Deposition of **PW-4/ LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பாண்டியராஜ் | **Age** | : | 51 |
| **Father's / Husband Name** | : | ராமர் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனுார் | **Calling** | : | கூலிவேலை |
| **Taluk** | : | போடிநாயக்கனுார் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07 day July 2025**

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தற்போது போடிநாயக்கனுாரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன் . வழக்கின் எதிரி சென்ட்றாயனை 10 வருடங்களாக தெரியும் அவர் எனது வண்டிக்கு டிரைவராக பணிபுரிந்து வந்தார் . தற்சமயம் எதிரியுடன் எந்த பேச்சு வார்த்தையும் இல்லை , வழக்கு சம்மந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) கடந்த 2021ம் வருடம் சென்ட்றாயன் எனது வண்டிக்கு டிரைவராக வேலைக்கு வந்தார் என்றும் , அவருக்கும் அவரது மனைவி வீரலட்சுமிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு , வீரலட்சுமி, அவரது அக்காள் மாரியம்மாள் வீட்டில் இருந்து வந்தார் என்றும் , 06.03.21ம் தேதி மாலை 6.30 மணிக்கு சென்றாயன் போடி பழைய பஸ் ஸ்டாண்டு அருகே இருந்தபோது அவ்வழியாக வீரலட்சுமியும் , அவரது அக்காள் மாரியம்மாள் ஆகியோர் வேலைக்கு சென்று விட்டு வந்தார்கள்

என்றும், சென்றாயன் மாரியம்மாளிடம் சென்று எனது மனைவி பிரிந்து சென்றதற்கு நீ தான் காரணம் எனக்கூறி கீழே கிடந்த விறகு கட்டையால் அவரை அடித்து காயப்படுத்தியதாகவும், அதனால் மாரியம்மாள் சென்றாயன் மீது புகார் கொடுத்ததாக என்னிடம் கூறினார் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரி தனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும், குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

((ஒம்)திரு.M.நல்லகண்ணன்,B.Com.,B.L.,)

Judicial Magistrate,
Bodinayakanur.